T-UN-391



ஓம். தத். சத்.

# சுபானுபூதி அநுபவ நூல்.

திருச்சி ஜில்லா முசிறி தாலூகா
கொளக்குடி கிராமத்தின்

வேதாந்த சித்தாந்த சமரச ஸ்ரீ சுத்தாத்வைத
ஸ்ரீவிலக்ஷணாநந்த சாதுசங்க சபையின்
— பிரதம சிஷ்யராகிய —

ஸ்ரீ அனுபவானந்த தீதபரமோத்தம
சுவாமிகளால்
அநுபவித்து வெளியிட்டருளியது.

குளித்தலை
ஸ்ரீ கணபதி பிரஸில்,
அச்சிடப்பட்டது.
1948

சுபம்.

# குரு ஸ்தோத்திரம்.

---

சீருலவு மென்குருவே சின்மயத்தின்
றன்னுருவே சீலமோரும்
பாருலவு பசுக்கருளும் பரமார்த்த
சிகாமணியே பாவியேற்கு
ஏருலவு மலிச்சை கொடுதின்ப
வாரிதிபடுத்த லெந்தஞான்றே
பேருலவு விலக்ஷணனந்த மெனும்
பெருநிதியே பெரியோர்வைப்பே.

★

மாசிலாமணியே போற்றி மாமறையாளா போற்றி
தேசுறுகனியே போற்றி
தெவிட்டாதவமுர்தே போற்றி
காசினியோர்க்கெட்டாத கற்பகமலரே போற்றி
வீசுவேதாந்தா போற்றி
விலக்ஷணனந்தா போற்றி.

ஓம். தத். ஸத்.

பிரமணேநம:

பரமகுருஸ்வாமி பாதகமலங்களுக்கு. பிரமதீர்த்த. அர்க்கிய பாத்ய. சுத்தஸ்தான. அபிஷேக முதலான. அயலற்ற ஆராதனே. நைவேத்திய. கற்பூரதீப. பேதமற்ற. துளசிபத்ர. புஷ்பாணி பிறிவற்ற பாதங்களுக்கு. சமர்ப்பயாமி. ஓம். தத். ஸத்.

எனது. உபாசனு முகூர்த்த வடிவ. கிருஷ்ணபரமாத்மாவே. உம்மை அடைக்கலமாக நம்பினேன். அடியேன். உமதிடத்தில். தானுக விளங்குவதைப்போல. அடியேனிடத்தில். கிருஷ்ண பரமாத்மா. சதாகாலமும். பேதமில்லாமல். பிறிவற்று பிரகாசிக்கும் படியான வரம். கேட்டுக்கொள்ளுகிறேன். இன்னமும் அடியேனுக்கு. கிருஷ்ணபரமாத்மா. உமது கிருபையால். ஆத்மஞானம் உதயமாகி. சித்த சுத்தித்துவாரா. மோக்ஷமடைய வேண்டுமென்று உம்மை. அடைக்கலமாக நம்பினேன்.

(குரு வாக்கியம்.)

1 நித்தியானந்தனெனும். கண்ணன்பாதம்
நிமலமுடன் தேகவெறுப் பாதியாக
சத்தியமாம். சமாதியிலே மனமடங்கி
சாராத. ஆன்மவிசாரணையே செய்து
பக்திமிகும் தடையின்றி ஆசான்ரூபம்.
பங்கயமே தன்சொரூபம் மென்னசேர்த்து
வத்துவிடை கலங்தொழிந்த வானமுற்ற
வாகிசப் பெருந்தகையையே போற்றி. போற்றி.

2 தள்ளுதல் தத்துவத்தை. தன்னையே
அடைதல் வேண்டும் — கொள்ளுதல்
ஞானயோகம். குறித்திடல். குன்றைஆன்மா
—மெள்ளவே அறிவைநோக்கி. மென்தளிர்
பாதம்நோக்கி — விள்ளுதல் இதுவேநீதி
விளம்புவர். மறையோரம்மா.

3 அப்பனே யோகமது பயிலுங்காலம்
ஆகாத தென்னென்ன அறைகுவேனுன்.
முப்பழமும் கண்டுடனே தேனுமாகா. மூ
டாத கறிவகைகள் முழுதுமாகா —
இப்புவியில் மாமிசங்கள் எல்லாமாகா.
ஏரானகள் அபின். கஞ்சாவாகா
செப்புமுறை பெண்ணுசை சேரலாகா.
ஜெகதலத்தில் உள்ளதெல்லா. ஆம்காதென்றே.

## (1) ஓம். தத் ஸத்.

பரமகுருஸ்வாமி கிருபை வேணும். வேணும்.
(துவம்பதவாச்சி யார்த்தம்.)

(1) நாம். யாரென் றெண்ணுகின்ற அறிவு. நாமென்கின்ற அறிவு—எங்கும். தானுய். அன்னியமில்லாமற் பிரகாசிக்கிறது.

(2) நாமென்கின்ற அறிவு. யாது. நாம். தன்னைத் தானுக அறியும் ஞானம்.

(3) நா.ம் ஏகரூபம். நமக்கு வேருய்ப் பிரிகிறதில்லை. நாம். பிரிவற்ற ஏக. ஞானம்.

(4) அறிவு. ஆத்மாவை. அறிவது. எவ்விதம். நாம். தன்னைப் பார்த்து. விடாதிருப்பது. நாமாயிருக்கும் ஞானம்.

(5) அறிவு. ஆத்மாவை. நாம். பிரமமென்றறியும். அறிவு.

(6) நாமென. அறியும். அறிவு. நம்மை விட்டகலாத அறிவு. அயலற்ற தன்னை அறியும் அறிவு. தன்மயமாய். தானுகும் நிறைர். தெங்கும்

(7) தன்னிலுதிப்பது ஏகம். அறிவு. அதிலுதிப்பது. நினைவு. சலனம். அதிலுதிப்பது. உலகம். துவிதம்.

(8) இவ்வாக்கையில். எதை நானென்றெண்ணுவது. நாம். எவ்விதமாயுள்ளது. நாம். எவ்விதமானது. நானென்பது எது. நாம். எங்கும். நாமாகும். நாம். எங்குமாயிருக்கும், நாம், ஏக. பூரண ஞான சொரூபம்.

(9) நாம். நாமாயிருப்பது. ஆத்ம ஞானம். நாம். நம்மை, நீங்காதிருப்பது, பிரமஞானம். நாம், அதுவும் இல்லாதிருப்பது, சுத்தப் பிரமஞானம்.

---

## (2)

(1) நாம், பிரமம் என்னுருவமாகிய, நம்மறிவு, நாம். அயலில் லாமல், நாம், எது நாம், தன்னிடத்தில், வேறுபடாதது. நாம். தன்னை, அறியும், தானுகும், நம்மறிவு. தன்னை நீங்காதிருக்க. நாம், அறிந்தால், நாம். எங்கும் தானுகும், பிரமம் எது. நாம். அது, நாம், தானுக, அறியும் ஞானம்.

(2) நாம். எது நாம். ஒன்றான பிரமம். நாம் பிரமம். வேருய் பிரிந்து தெரிகிறதே, பிரமம். அது. நாம். எது. நாம். சகலமும் பிரி வில்லாத பிரமத்தை, நாம், வேருய் பிரிகிறதில்லை.

(3) நாம். பிரிவற்ற பிரமத்தை, நாம் பிரியாது, நாம், மறவா திருந்தால், நம், சுத்த, அறிவு, பிரகாசித்துக்கொண்டேயிருக்கும். பிரிவில்லாத, தனி மனது பிரகாசிக்கத் தெரியும். தன்னிடத்தில், பிரிவற்று, வேறுபாடில்லாதது, தானுய் பிரகாசிக்கும்.

(4) நனவில் உலகத்தோற்றம். நமக்கு வேருய், தெரியாதிருந் தால், நம்மறிவு, நாமாய் காணும், பிரபஞ்சமெல்லாம், :பிரமமாய் அறிந்தால், பேதமற்று, எங்கும், நாமாய் விளங்கும். தன்னை நாம், பிரமமென்று அறிந்தால், தாக்கற்ற, தற்பர உணர்வு, தானுய் பிரகாசிக்கும்.

(5) பேத நினைவானுல், பிரமம், நாம். போத, அறிவானுல் நாம் பிரமம். அஞ்ஞான மனது, உருவம், ரூபத்தை, நானென்று

நினைக்கிறது. மெஞ்ஞான அறிவு, தன்னை, நாம், பிரமசொரூப மென்று அறிகிறது. பிரமத்துக்கு வேறாய், நாம், பிரிகிறதில்லை. நமக்கு வேறாய் பிரமம், பிரிகிறதில்லை.

(6) அயலுற்றபோது, பிரமம், நாம். அயலற்றபோது நாம், பிரமம். இவ்வளவும், நாமாயிருக்கும்போது, நாம் பிரமம். ஆதிகாலத் திலிருந்தே, நாம் பிரமமாயிருக்கிறோம். அதற்கு முந்தியே, நாம், பிரமமாயிருந்தோம். பேதமாய் விளங்கத் தெரியும், நினைவை, இவ் விதமாக, மனது நினைக்கிறதென்று, அறிந்தது யார். நாம் யார். நானென்பது, எது.

(7) நாம். பேதமற்று, அயலில்லாமல், சுத்த சொரூபமாய், விளங்குகிறது. எதற்கோ, அதை, நாம், சுத்த, பிரமமென்றறியவும், சாட்சிமாத்திரமாய் இருப்பது. எதற்கோ, அது. நாம் பிரமம். நாம் ஏகமாய் விளங்கத் தெரிவது எதற்கோ அது நாம். பிரமம். நாம் யார். நாம் என்பது எது. நாம் எங்கும், ஏக, பூரணமாய், யாவும், பிரிவில் லாத நாம். நாம். நாமாய், நாம் மாத்திரமாய், நாம், சதா நாம், அதாகவே, நாம். பிரிவில்லாததாய் விளங்கும்போது. நாம். நம்மை, பிரிந்து, வேறொன்றும், உதித்தறியாதது. நாம். பிரமம்.

(8) அகில சுபாவத்தை, அறியும், அறிவு. அதற்கு வேறாய், இருந்து, பார்த்து, நினைக்கிறது, மனது. அப்படி நினைக்கிறது, மனது. என்று. புத்தி, அறிந்து, தெரிந்துகொண்டு அறிவை நாடி, தேடுகிறது. நாம், நம்மறிவு, நாமாய் விளங்க, அறிந்தால் நாம், பிரமம். நாம். ஏகமாய் விளங்குவது ஞானம். உலகம். தானாய் விளங்குவது. பிரமம். நாம். அதாய். பிரகாசிக்க தெரிகிறது. அகண்ட பரஞானம். உருவத்தைத் தள்ளிவிட்டு. பிரமத்தைப் பார்ப்பது. ஞானம்.

(9) நாம். நாமாய், விளங்கி, பிரகாசிப்பது நாம். பிரமம். நாம். பிரமத்திற் கலந்து. உலகமும், நாமும், ஒன்றாய், வேறாய்ப் பிரிகிற தில்லை. நம்மறிவு, நாமாய், நிறைந்து பிரகாசிப்பது. நாம். பிரமம், நாம். பிரமமென்றறிந்தது. ஞானம். ஞானம், பிரமத்தை பிரியாது. மறவாத பரியந்தம், ஞாலமும், மறைந்து இருக்கும். ஞானம். மறைந்தால், அஞ்ஞான, விபரீத, உலக, சரம், அசரம், தோற்றிக் கொண்டேயிருக்கும் பிரமத்தை, விடாது, ஞானம். மறவாதிருந் தால், பிரமானந்தம் பிரகாசித்துக்கொண்டேயிருக்கும்.

## (துவம்பத லக்ஷியார்த்தம்)

(1) நாம், நாமாய், நம்மைத்தான் பார்க்கிறோம். நமக்கு வேறாய், பிரிவணுவும் காணோம். நாம், எங்கும், நாமாய்த் தெரிகிறது. நமது, சுத்த, பிரமமானது, நாம், சுத்த பிரமமென்றறிகிறது. நமக்கு, தெரிவது, சுத்த சொரூபம். பிரகிருதிக்குத் தெரிவது, மாயா, விகற்ப ரூபம். சுத்த சொரூபம், நாமாய் தெரிகிறது. நாம், சுத்த சொரூப மாய்த் தெரிகிறது.

(2) நாம், பார்க்க, நம்மைக் காணலாம். எங்கும், நாமாய்த் தெரியும். எனக்கு வேறாய், ஏதாகிலும்உண்டா, பார்ப்போம். வேறாய், யாதாகிலும், தெரிகிறதா, பேதமில்லாததால், நாம், சுத்தப்பிரமம். எனக்கு. வேறாய், ஏதாகிலும், பார்க்க, திருசிய. தோற்றம், தினை யளவும் காணோம். பேதமற்று, நாம். பிரமமாயிருக்கிறோம். சுத்தப் பிரம, அறிவு. நாம், சுத்த பிரமம், என்று, அறிந்து தெரிகிறது. அறிவு, அறிவைத்தான், பார்த்து, அறிகிறது. அன்னியம். வேறே. அறியாது. அதற்கு அது, அதாய், தெரிகிறது.

(3) பரமாத்மாவை, நாமாய்த் தெரிவது. ஆத்ம ஞானம், நம் மறிவுக்கு. சுத்தப் பிரம. அறிவு, பேதமற்று, தானே தானாய் தெரி கிறது. பிரிவற்ற, சுத்த சொரூபம், யானாய் விளங்குகிறது. எனக்கு பேதமில்லாதிருக்கிறதென்று, அறிந்தது, ஆத்ம ஞானம். என்னை, நிறைவடிவமாக அறிந்தது. ஆத்ம ஞானம். எங்கும், நாமாய், அறிந்தது, ஆத்ம ஞானம். எனக்கு வேறாய்ப் பிரிவில்லை. எல்லாம், நானே யென்றறிந்தது, எனது, ஆத்ம ஞானம்.

(4) நமது, ஞான சொரூபம், எங்கும், அதாய்ப் பிரகாசிக்கத் தெரிகிறது. நமது, ஞான, அறிவு, ஒன்றாய், பூரணமானதை, பார்ப் பதால், கடவுளைத் தவிர, வேறு, அறியாது, வாராய் மனதே, நீ, நானாய், நானே, நீயாய், பார்க்க, எல்லாம், நானாய், நானே, எல்லா மாய், தெரிகிறது. எங்கும், நானாய், நானே எங்குமாய், அறியும்— அவ்வறிவுமில்லாத, சுத்தப் பிரமம், நானாய், நானே, சுத்தப் பிரம மாய், இருக்கிறேன்.

(5) நாம், சுத்தப் பிரமம், என்சுத்த, அறிவு, என்னில், ஒன்றாய், சுத்தமாய், யான், சுத்த சொரூபமாய், எனது, சுத்த, ஞான மானது, என்னை, சுத்த சொரூபமாய், அறிகிறது. நம்மறிவுக்கு, அன்னியமில்லை. நாமாய்த் தெரிகிறது. நம்மறிவில், ஆரோபிதமான, மனதிற்கு, வேறாய்த்தெரிகிறது. யாவையும், பிரமமாய்த் தெரிகிறது. அதுவும், நாமாய்த் தெரிகிறது—எனக்கு வேறாய் நினையளவேணும் காணோம். யான், அன்னியமில்லாத சுத்த பிரமத்திற்கு, யாவும், அயலற்ற, சுத்த அறிவுதான் தெரிகிறது. சுத்த ஞானம், மறையாது தெரிந்தால், நாம், சுத்த பிரமம், ஆகலாம்.

(6) சத்தானது, தன்னை, சுத்தமாய்த் தெரிகிறது—நாமே எல்லாமாய், தெரிவது. நாம் சுத்த பிரமம். : என்னறிவுக்கு, சுத்த ஞானந்தான் தெரிகிறது. நம்மை நமக்கு விடாது தெரிவது, சுத்த ஞானத். நாம், பிரமம். வேறாகாதிருப்பது, சுத்த ஞானம். நமது ஞானமானது, யாவுமாயிருக்க தெரிந்தால். அதுவும் ஏகமாய் இருக்கத் தெரிந்தால், அதுவும், ஏகமாய் இருக்க அறிவது. நாம், சுத்த ஞானம்.

(7) எனக்கு, பேதமில்லாது, நானாய் தெரிவதால், பிரிவுள்ள உலகம், எப்படி, இருக்கும்.—அதனால் நான், சத்தாயிருக்கிறேன். பேதமில்லாத, நாம், சுத்தப் பிரமம். பேதமாய் தெரிவது, மாயா பிரகிருதி. பேதமாகாத, உலகம், சுத்தப் பிரமம். அது, நாமாய்த் தெரிவது. நாம், சுத்தப் பிரமம் — ஆத்மாவானது தன்னை, ஏகம், ஞானம், பூரணம், நாம், சத்தென்றறிகிறது. — அதனால், நாம். சித்து. அது, நம்முருவம்.

(8) மெய்ஞான சுத்த மனதிற்கு, நாமாய்த் தெரியும்—அஞ்ஞான, அசுத்த மனதிற்கு, பேதமாய் தெரியும். எனக்கு, தெரிவது, சுத்த பிரமம், ஏகம். உனக்கும் தெரிவது, அசுத்த மாயை. துவிதம், திருசியம், வேறாய்த் தெரியப்படாதது. நாம், சுத்தப் பிரமம். இருக்கிறது, சுத்தப் பிரமம். இல்லாதது, அசுத்த, விகற்பத் தோற்றம். வேறு, தெரியாதிருப்பதென்று, தெரிகிறது. அது, நம்முருவம் — அது, இப்போதிருக்கிறதற்கு, எல்லாம், தானாய், ஏகமாய்த் தெரிகிறது.

(9) எல்லாம், நாமாய்த். தெரிவது. ஞானம். நாம், அதாய் இருப்பது, பிரமம். நம்மை. நமக்கு. அயலில்லாது, நாமாய்த் தெரிவது, பிரமம், நிச்சயம். நாம், பிரமமெனத் தெரிந்தால் — உலகம், யாவும், பிரமமாய்த் தெரியும். சுழூத்தியிலிருக்கும், பேத, தோற்றமற்ற, வஸ்துவே நாம். அதை, நனவிற் தெரிந்தால், நாம், சுத்தப் பிரமம் — மூவவஸ்தையும், வேறாய்த் தெரியாதிருப்பது, நமது, துரிய ஞானம், சாக்கிரம், சொப்பனம்; சுழுத்தி, இம்மூன்றையும், அறியாதது, துரியம். அது, நம்முருவம். நாம், சதா துரிய சுபாவமுள்ளவன். நாம், விகற்ப மிறந்த, சுத்த ஞானம். அது, நாம், சுத்தப் பிரமம்.

---

## தற்பத வாச்சி யார்த்தம்.

### ( மஹா வாக்கியம் )

(1) நாம், சத்தென்றறிந்தது, சித்து. சத்தை விட்டு சித்து பிரியாதிருப்பது. ஆனந்தம்.

(2) சத்தானது, நாம், சத்தென்றறிந்ததனால், சத்துக்கு, சித்ரூபத்துவம், சுயமாய் சித்தித்திருக்கிறது. சத்தே சித்தாய், ஏகமானதால், ஆனந்தமாயிற்று.

(3) பிரமமானது, நாம், பிரமமென்று தெரிந்ததனால், பிரமத்துக்கு, ஏக ஞானத்துவம், சு பா வ மா ய் சித்தித்திருக்கிறது. பிரமத்தை, ஞானம். விடாது. தெரிந்தால், பிரமானந்தம், மறையாது. பிரகாசிக்கும்.

(4) எனக்கு, என்னுருவம் தெரிகிறது. எனது சுத்த, அறிவு சொரூபம், பூரணமாய் சேடித்ததாய், பிரகாசிக்கிறது. என்னுருவம், வேறு தெரியக் காணோம். நாம், அதில், ஏக. பூரணமாய். இருக்கிறோம்.

(5) இந்த மஹத்தான, ஞானப்பியாசமானது, இந்திரியங்களையும், மனதையும், ஒருமுகப்படுத்தி, இடைவிடாத பிரம விசாரணையாலேற்பட வேண்டுமே தவிர, தீர்த்த யாத்திரை, மூர்த்தி

தெரிசனம், விக்கிரக ஆராதனம், அன்னதானம், மந்திர ஜெபம், வெளி ஆசாரம், உடலை வாட்டக்கூடிய, சரீரத்வம், முதலியவைகளால் நமக்குள். இருக்கும், தெய்வத்தை, எளிதில், அறிய முடியாது அநாத்ம காரியங்களைக் கொண்டு, ஆத்மாவை எப்படி. அறியமுடியும். அந்தர் முகமாக அறியவேண்டிய பரமாத்மாவை, பகிர்முக காரியங்களால், எப்படி அறியக்கூடும். கூடாது.

(6) நாமாய், நாம், சுத்த சொரூபமாய் பிரகாசிக்கிறது. என்னுருவம், நாம், நாமாயிருக்கும்போது நமது, ஞானமானது, யாவுமாய், சுத்த. சொரூபமாய் பிரகாசிக்கிறது. நமது ஞானம், பிரகாசிக்கும்போது, அனைத்துமாய், அன்னியமில்லாததாய், சுக, சொரூபமாயிருப்பதை, அறிவு, அறிந்து. தெரிகிறது.

(7) நாம், பிரமம், என்னுருவம், ஏது ஞானந்தான், தோன்றுகிறது. தோற்றம், யாவும். நாமாய், அறிந்தால். பிரமம். ஏகமாய்த் தெரியும். நாம், யாவுமாய் தோன்றுகிறது. இவ்வளவும், நம்மறிவு தான் பிரியாதிருந்தால், பிரமம். பேதமானால், நினைவு, விகற்பம், எனது சொரூபம், என்னை, தானாக, அறிகிறது. எனது, ஞானமானது, என்னை, அகண்ட, பூரண, சொரூபமாக அறிகிறது.

(8) தோற்றம், அனைத்தும், நமக்கு, வேறாய், இருந்தால், அல்லவா, அதை, நினைத்து, உரைக்க வேண்டும். நாமாய், சுத்த. சொரூபாகாரமாய், பிரகாசிக்கிறது. நமக்கு, ஏக ஞானம், பிரகாசித்தால், நாம், ஏகமான, பிரமமென்றறியலாம். எனது சொரூபம், எங்கும், அதாய் பிரகாசிக்கத் தெரிகிறது. எனது. ஞானத்திற்கு, ஏகமான நாம், சுத்த பிரமஞான சொரூபமாய், தோற்றம், தெரியாது, நாம், பிரகாசிக்கிறோம். தோற்றம், தெரியாது. பிரகாசிக்கிறது, நாம்,

(9) நமது, சுத்த, சாந்த, மனது, உதித்தால், சுத்த ஞானத்திற்கு, சுத்த, சத்து, பிரகாசிக்கத் தெரியும். நமக்கு, வேறு பார்த்து, அறிய, தெரியக்காணோம். நாமாய், பிரகாசிக்கிறோம் — அது, அதை, அதாய், அறியும். ஆன்ம சொரூபம்—நாம், பேதம், இல்லாது பிரகாசிப்பது, நமது, பிரம ஞானம், நீக்கமற, நிறைந்திருப்பது, நினதுருவம், அது, நினது ஞானம்.

(1) பிறிவும், பேதமும், அயலும், அன்னியமும், அறியாததும், அதுவாயிருப்பதும், அகண்ட பர ஞானம், நீங்காதிருப்பதும், நின துருவமாம், கிரியாவஸ்தை மூன்றும், இல்லாதிருபபது. நமது துரிய ஞானம், நாம். அதற்கும், உனக்கும், அப்பாற்பட்ட ஞானதீத மான, நாம். சுத்தப் பிரமம், உலகபேதம், யாவும், நாமாய்த் தெரிந் தால், பிரம ஞானுனுபவம், பிரகாசிக்கும். நமதிடத்திலிருந்து, இனி, ஒன்றும், பேதம், உதியாதிருப்பது, நமது ஆத்ம ஞானம்.

(2) எனக்குள், எனது, பிரதிபிம்பம், வேறய் தோன்றக் காணேம். நானய், பிரகாசிக்கிறேம். சதா: எங்கும், நாமாய், அறிவது. நமது ஞானம், பிரகாசிக்கிறது: ஏகம், நாமாய், இருக்க நாம், ஏகமாய் இருக்க, அறிவது, துரிய ஞானம். அதீதமான நாம், சுத்தப்பிரமம்.

(3) மனதை கிரகிக்கக்கூடிய, சூட்சும, இந்திரியங்களும், சுத்தப்பிரமம்: தோற்றம். விகற்பம்துக்காதாரமாகிய, மனமும், சுததப் பிரமம்: அதற்கு அதிஸ்டானமாகிய, நாமும், சுத்தப்பிரம மென, அறிந்தால், வேறு பேதம், இல்லாது; மனமும், சுத்த, பிரமத்தில், கலந்து விட்டதென்று, பார்த்துக்கொண்டேயிருந்தால், எங்கும், நமது, சுத்த சொரூபமாய், பிரகாசிக்கும்: நாம் சுத்தப் பிரமம். நாமும், சுத்தப் பிரமமும், ஏகமாய், அறிவது, ஞானுப் பியாசம்.

(4) நாம், சுத்தப் பிரமமாய் இருந்து, நாம், ஏகமாய், பிரகாசித் திருப்பது, நாம், சுத்த, பிரம, சொரூப, அப்பியாஸம் — ஞானம், பிரகாசிக்கும்போது, நாம், சுத்த, பிரமமாய், இருக்கிறேம். நாம், சுத்தப் பிரமமென, அறிந்த, ஞானம், பிறியாதிருந்தால், நமது, சுத்த பிரம, ஞானு னுபவம், பிரகாசிக்கும்: நாம், சுத்தப் பிரமமா யிருப்பதால், நாம். பேதம், இல்லாது, சுத்த சொரூபமாய், பிரகா சிக்கிறேம். நாம், சுத்த, பிரமானு சந்தானம்.

(5) நாம், அல்லாததை, நாமென்றெண்ணுவது, அஞ்ஞானம்: நாம், எதார்த்தத்தோடும், இருப்பது. நாம், சுத்தப் பிரமசொரூபம்: நம்மை, நாம், சுத்த. சொரூபமாயிருக்க, அறிந்தால்: நமதானது, நம்மை, நாம், சுத்த, பிரமமென, அறிந்தது. நமது, ஞானப்

பிரகாசம்.—இந்திரியத்தோடும். மனது, அறிபொருளே, நமதென் றெண்ணுவது, சரி. அது, நாமல்லவே. நாம், ஒன்ருய், தெரியும், பரியந்தம், சகலத்தியாகம், செய்யாதவன். யாவும், ஏகம். நாமும், ஏகம். ஏகம், நாமாயிருக்க, நாமும், ஏகமாயிருக்க, அறிந்தது, நாம். சுத்த பிரமம்.

(6) ஏகமாய், பிரகாசிப்பது, நாம், சுத்தப்பிரமம் — மாயா வுணுக்குள்ளிருந்து, வரும், மனதுக்கு, பேத தோற்றம் தான் தெரியும். நமக்கு, உள்ளும், புறம்பும், ஒன்ருய், அது, தானுய், பிரகாசிக்கும். நமது, சுத்த, ஏக சொரூபம்—தோற்றம், எதாயிருந் தாலும், அதும், இதும், சுத்தப் பிரமம். தோற்றம், இறந்த இடத்தில், நாம், சுத்தப் பிரமம் : நாம், சுத்தப் பிரமமாயிருப்பதால், உள்ளும், புறம்பும், ஒன்ருய், பிரகாசிக்கிறது : உள்ளும், புறம்பும், ஒன்ருய், எது, பிரகாசிக்கிறதோ, அது, நாம். சுத்தப்பிரமசொரூபம்.

(7) நாம், சுத்தப்பிரமம். ஞானம், ஏகமாய் பிரகாசிக்கிறது. அதிலிருந்து, இதுபரியந்தம், நாம், சுத்த சொரூபமாய் பிரகாசிக் கிறேம் : நமது ஞானம், எங்கும், தானுய், பிரகாசிக்கிறது — நாம், தானுக, பிரகாசிப்பது, ஞானம் : அது, எங்கும், நமது, ஞானப் பிரகாசம் : நமது, ஜோதிப் பிரகாசம் தான், ஞானம் : நமதானது, நாம், சுத்தப்பிரமம் : எனது, ஞானசொரூபம், எங்கும அது தானுய், சதா, பிரகாசிக்கிறது. அசுத்த மனேதோற்றம், எல்லாம். உதியாது, நாம், நாமாய், நம்மை, மறவாது. நாம், ஏகசொரூபமாக, தெரிவது. நாம், சுத்தப்பிரமம். எனது, சொரூபம், எங்கும், தானுய், பிரகாசிக்கிறது.

(8) நாம், சுத்தமாய், பிரகாசித்தால், நம, தசுத்த மனே தோற்றம், இறந்துவிடும்—நாம். எது, நாம். எவ்விதமானது. நாம், மனேதோற்றம், இறந்த, சுத்த, பிரமசொரூபம் : பேதம், இல்லாது, நாமாய், தெரிவதால், நாம் சுத்த பிரமமென்றறியலாம் : நாமாய், நாம், சுத்த சொரூபமாய் தெரியும். நாம், வேறு, அறிந்திலன். நாம், சுத்த, பிரம சொரூபம் : பிரகிருதி, ஆதாரமாகிய, மனதே, உனக்கு, பேத தோற்றம் தான் தெரியும். என் அறிவுக்கு, ஏக ஞானம, சுத்த சொரூபமாய், அது நாம், தானுய், பிரகாசிக்கும்,

(9) நாம், அயல் அறியாது, நாமாய், தெரிவது, பிரமம்: நாம், பிரமமெென அறிந்து, சர்வமும், நாமாய்த் தெரிந்து, அறிவுஉதயமாகி, பற்றுதலில்லாமல், எனது, பார்வை, ஏகமாய்த் தெரிவது. நாம், பிரமம். நமது, ஞானத்தால், அறிவது, ஏக சொரூப . என்னை. எனக்கு, ஏகமாய்த் தெரிவது, நாம், பிரமம் : நமது, ஞானத்தால், அறிவது, ஏக சொரூபம். என்னை, எனக்கு, ஏகமாய் தெரிவது. நாம், பிரமம் : எனது, ஞானம், என்னை, ஏகமாய், அறிந்து, சுத்தமாய். பிரகாசிப்பது. நாம், பிரமம்.

## ( தற்பத லக்ஷியார்த்தம். )

(1) நமக்கு, ஞான சொரூபம். ஏ க ம ா ய், பிரகாசிக்கிறது. எதனால், நாம், பிரமமாயிருப்பதால் — நமக்கு, என்றும், ஒன்றாய், பிரகாசிக்கத் தெரிவது. எதனால், நாம், சுத்த பிரமமாயிருப்பதால் : நமக்கு, பேதம், இல்லாது, பிரிவற்றிருப்பது, எதனால், நாம், சுத்தப் பிரமமாயிருப்பதால் : நமக்கு, வேறொன்றும், தெரியாதிருப்பது. எதனால், நாம், சுத்தப் பிரமமாயிருப்பதால் : நாமாயிருப்பது, நாம். பிரமம். தானாய், பிரகாசிப்பது : நாமாயிருப்பது, நாம், பிரமத்தை, நாமென, மறவாதிருப்பது : நாமாயிருப்பது, நாம், சுத்த, பிரம சொரூபமாயிருப்பது. நாமாயிருப்பது, நாம். ஏகமாய், நிறைந்து, பிரகாசிக்க, அறிந்திருப்பது.

(2) நாமென்றறிவது, ஆத்மஞானம். அதை, நீங்காதிருப்பது, ஏகசொரூபம். நமது, ஞானம், உதயமானால், தான், எங்கும், நாமாய், தெரியும். ஆத்மாவானது, தானாக, தன்னைப்பார்ப்பது, ஆத்மஞானம். பிரமமானது, தன்னை, நாம், ஏகமென்றறிவது, பிரம ஞானம் : என்னிடத்திலுண்டான, ஞானம். என்னை, நாம், ஏகமென்றறிகிறது: நாம், என்பது, நம்மிடத்திலுண்டான, ஞானம்.

(3) நம்மிடத்தில், நாமென்றுதித்த ஞானம், யாவும், நாமாய், அறிந்தது. அதனால், நாம், சுத்தப் பிரமம் : தோற்றம், இறந்த, சுத்த சொரூபம். நம்மை, நீங்காதிருக்க, அறிந்தது. நாம், சுத்தப் பிரமமாயிருப்பது : என்னறிவினால், பேதமானமனதைப் பார்த்தால்,

பேத மனம், இறந்து, நாம், தானுய், பிரகாசிக்கத் தெரிவது, எதனுல், நாம், சுத்தப்பிரமமாயிருப்பதால் : எனது, சுத்த சொரூபமாய், அதாய், பிரகாசிக்கத் தெரிவது. எதனுல், நாம், சுத்தப் பிரமமாயிருப்பதால்.

(4) பேதம், யாவும், அறியாது, நமது, ஞானம். ஏகமாய்: பிரகாசிக்கத் தெரிவது. எதனுல், நாம், சுத்தப் பிரமமாயிருப்பதால், நம்மிடத்திலுண்டான, ஞானமானது, நம்மை, நிறைவடிவமாக, தெரிவது, எதனுல், நாம், சுத்தப் பிரமமாயிருப்பதால் : பேதமாய்த் தெரிபவன், அசுத்த மாயாப் பிரகிருதி : ஏகத்துக்குத் தான், சுத்த, ஏகமாய்த் தெரியும். நாம், ஏகமாய்த் தெரிவது, நாம், சுத்தப் பிரமம். நாமாய்த் தெரிவது, எங்கும், நாம், சுத்தப் பிரமம். நமக்கு, அன்னியமாய்த் தெரிபவன், அசுத்த மாயை : கற்பித இன்னினைவுகளெல்லாம், பேதமன கற்பிதனுக்கான வேலை.

(5) யாவும், வாமாய்த் தெரிவது, ஆத்ம ஞானம் : அதுவும் தோனுகிருப்பது. நாம், சுத்தப் பிரமம். நாம், நாம் தான். அனைத்திலும், பூரண சொரூபம் : ஊனுக்குள்ளிருக்கும், என்னறிவைக், கொண்டு, என்னை, சுத்த பிரமமென்றறிகிறுர்கள் : அவ்வறிவில், ஆரோபிதன், என்னை. உலகமாக, தெரிகிறுர்கள். என்னறிவுள்ளவர்கள், என்னை, சுத்த பிரமமென்றறிகிறுர்கள் : என்னறிவு, மறையப்பட்டவர்கள், என்னை, பேத ரூபமாக, அறிகிறுர்கள்,

(6) நாம், சுத்தப் பிரம, அறிவுக்கு, நாமாய், சுத்த சொரூபமாய், பிரகாசிக்கிறது. வேறு காணேம் : நமக்கு, நாமாய் தெரிவது நாம். சுத்தப் பிரமம். நாம் : சுத்தப் பிரமமாயிருக்கிறேம். எனது சுத்த பிரமத்திற்குள்ளே யிருக்து, நாம், பூரண சொரூபமாய், பிரகாசிக்கிறது : எனது, ஞானத்திற்கு தான், தெரிய, அறியும். அகம். பிரம ஐக்கியம் : மஹாவாக்கியம். அகம், பிரம்மாஸ்மி : நாம், சுத்த பிரம ஞானத்திற்கு : நாம், சுத்த சொரூபமாய், பிரகாசிக்கிறது : நாம், ஏக சுத்தப் பிரமம்.

(7) நாம், அகண்டபரா, சுத்தப் பிரமம், நாம் : நம்முருவம், சுத்த சொருபம் : நாம். சுத்த பிரமம். நாம், தான். பேதம், காணேம். நாம், சுத்தப் பிரமம். நமக்கு, சுத்த சொருபம், தான், பிரகாசிக்கிறது : நாம், பிரமத்திற் கலந்து பேதம், இறந்து, ஏகமாய்,

பிரகாசிக்கிறது. பேதமில்லாதிருப்பது. நாம், சுத்தப் பிரமம்: பேத, மாய்த் தெரிவது: மாயாப் பிரகிருதி. பேத பிரிவற்றிருப்பது, நாம், சுத்தப் பிரமம். நாம், ஏகமாய், இருந்தால், நாம் சுத்தப் பிரமம். நமது, தூயநிறை, அறிவு, உதயமாகிய, அப்பூரண, அறிவுதான், நாம்.

(8) நாம், சுத்த சொரூபமாய், தானேதானுய், பிரகாசிக்கிறோம். நாம், நம்மை, நமக்கு, நாமாய், நாம், தான். நமது, சுத்த, சொரூப மாய், நாம், பிரகாசிக்கிறது. சுத்தப் பிரம, ஞானனுபவப் பிரகாசம், நாம், சுத்தப்பிரமம். நம்முருவம், சுத்தசொரூபமாய், பிரகாசிக்கிறது: நாம், மாத்திரமாய், தெரிவது, ஆத்மஞானம்: நமது ஏகஞானம், தான் மாத்திரமாய் தெரிவது. ஆத்மாவுக்குத்தான், நம்மறிவு, நம்மை, நாம், ஏக, பூரண, சொருபமாய், இருக்க, அறிகிறது: தோற்றம் தெரியாது. எனது, ஏக, ஞானமானது, தானுய், பிரகாசிக்கிறது.

(9) என்னறிவுக்கு. தோற்றம், தெரியாதிருப்பதை,அறிந்தது நாம், சுத்தப் பிரமப் பிரகாசம். நாம், ஏகமாய், பிரகாசிப்பது. நமக்கு. நமது, சுத்தப்பிரமப் பிரகாசம். நாம். சுத்தப்பிரம சுபாவம், நாம், சதா, ஏகமாய், பிரகாசிக்கிறோம். நாம்: நாம், சுத்தப்பிரமம். நமது ஞானம், சுத்த சொரூபமாயிருக்க, அறிவது, நாம்: நாம் சுத்தப்பிரம மென்றறிந்தது, நீங்காதிருப்பதை, விடாதிருந்தால், நாம், சுத்தப் பிரமம்: பிரகாசிக்க, மாயை, இறந்துவிடும்: நாம்: நாம், சுத்தப் பிரமம். மனமே, நீயும், சுத்தப்பிரமம். சுத்தமாய்த் தெசிவதெல்லாம் நாம். சுத்தப்பிரமம்.

(1) நாம், எங்கும், பேதம், இல்லாது, ஏகமாய், பிரகாசிப்பது. நாம். சுத்தப்பிரமம்: நாம். சுத்தப் பிரமத்துக்குத்தான். சுத்த சொரூபம், தோன்றி, பிரகாசிப்பது. நாத, சுத்தப் பிரமம். நமக்கு, சுத்த, சொரூபம், தோன்றுகிறதெனும், ஓசை விடுத்து, ஒளி, சத்தை விடாதது. நாம், சுத்தப்பிரமம்: மூவவஸ்தைக்கும். தான், சாட்சி யாய், நாம். இருந்து, பார்ப்பது, நமக்கு, துரிய, ஞான சுபாவம்.

(2) மூவவஸ்தையெனும், பேதம் இறந்து, தான், சுத்தசொரூ பமாய், இருப்பது, நாம், சுத்தப்பிரமம். மாயா, அதீத, நமக்கு, சுத்த ஏகசொரூபம், உதயமாகியது, நாம். நானே, நானுய், பிரகாசிக்கிறது.

நமது துரிய நிலைமை, நாம், சுத்தப்பிரமம். நாம், சுத்தப்பிரமம். நமக்கு, சுத்த, ஏக ஞானசொரூபம், பிரகாசிக்கிறது. நம்மறிவினிடத்தில் பேதம், உதிக்க, அறியாது, நாம், ஏகமாய், பிரகாசிக்கத் தெரிந்தது. நமது, ஞானம், நாம், சுத்தப்பிரமம். நமது, சுத்தஞானம். உதயமாகி, அதாய் பிரகாசிக்கிறது.

(3) இது நானல்ல. இது வல்ல வென்று. எல்லாம் கடந்ததே, நாம். அது. எது. நாம். எவ்விதமானது. நாம். மூவஸ்தைக்கும் அதீதமான நாம். சதா துரிய ஞான சுபாவமாய். சுத்த சொரூபம். நானே நானுய், பிரகாசிக்கிறோம். யாவும். நாமாய்த் தெரிவது சுத்தப் பிரம ஞானம் உதயம். அதுவும். தோனுதிருப்பது. நாம். சுத்தப் பிரமம். நாம். நமது. ஏக. சுத்த. சுத்துவ. சுத்த சொரூபமாய். அப்படி பிரகாசிப்பது. நாம். சுத்தப் பிரமம். நாம். நம்மைப் பார்த்தால். நம் மறிவுக்கு. பிரபஞ்சம். யாவும், சுத்தப பிரமமாயும். அது. நாமாயும். நாமே, அதாயும். பிரகாசிக்கிறோம்.

(4) நாம். சுத்தப் பிரமம். அறிவு. ஏகமாய். அறிவது. ஆத்மாவை. ஞானம். நீங்காதிருப்பது. நாம் ஏகமாய். உதயமாகியது. நாம். சுத்தப் பிரமம். நாம். எது. சுத்த. ஏக சொரூபம். நம்மிடத்தில் உதயமாகி சுத்த சத்சொரூபம். நாம். சுத்த பிரமம். உலகபேதம். யாவையும். சுத்தப்பிரமமாய். அறியும். அது நாமாயும். நாம். அதாயும். ஏகமாய். பிரகாசிக்கிறது. நாம். சுத்தப் பிரமம். நாம். எது. நம்மறிவு. எங்கும். ஏகமாய். பூரணசொரூபமாய். பிரகாசிக்கிறது. வேறு பேதம் காணேம். நாம். சுத்தப் பிரமம். என்னறிவினுல். என்னைப்பார்த்தால். என்னறிவுக்கு. பேதபிறிவு. இறந்து சுத்த. ஏக சொருபமாய். பிரகாசிக்கிறது. நாம். சுத்தப் பிரமம்.

(5) நாம். சுத்தப் பிரமம். நம்மறிவுக்கு. சுத்த. ஏக சொரூபம் பிரகாசிக்கிறது. நாம், சுத்த. சொரூபமாய். அது, தானுய். பிரகாசிக்கிறோம். நாம். சுத்த பிரமம். நம்மிடத்தில். நமக்கு. உதயமாகி பிரகாசிக்கிற. சுத்த. ஏகசொரூபம். நாமாய். இருக்கிறோம். அறிவானது. தனது. ஞானத்தினுல். நாமென்றுணர்வது. சுத்தப் பிரமத்தை. சுத்த ஞானம். நாம். சுத்த பிரமமென்று, அறிவதாகும். சுத்த. சொரூபத்திலிருந்து. உதயமாவது. நாம். சுத்தப் பிரமம். சுத்த சொரூபத்திலிருந்து. உதயமாகிய நாம். தூய்சத் சொரூபமாய். பிரகாசிக்கிறோம்.

நம். சுத்த. அறிவு. விகற்ப ரூபமானுல். நாம். பிரமத்தை கைவிட்டு வேருகும். நாம். மறவாது. ஏகமாய். பிரகாசித்தால். நாம். நாம்தான் சுத்தப் பிரமம்.

(6) நாம். தான். சுத்தப்பிரமம். நம்மறிவு. ஏகம். தானுய். பிரகாசிக்கிறது. நம்மறிவு. நாம். சுத்தப் பிரமமென்று. அறிகிறது. நாம். ஒருவன் தான். பூரண சொரூபன். வேறு இதர வஸ்துக்கள். காணேம். சுத்த சொருபத்திலிருந்து. உதயமாகிய. நாம். சுத்தப் பிரமம். நாம். சுத்தப்பிரமம். நம். சுத்த. அறிவு. தச திசை யாவும், விழுங்கி. சுத்த. சித்து. தானுய். ஏகமாய். பிரகாசிக்கிரேம். நாம். என்பது. பிரமம். ஞானத்தை. நாம். என்பதாகும். சுத்த சொருபத் திலிருந்து நாம். உதயமாகி. ஏகமாய். பிரகாசிக்கிரேம். தான். சுத்தப்பிரமமென. இருப்பதால். அதுவும். நாமும். எது. நம். ஏக. ஞானமானது. யாவும். நாமாய் பிரகாசிக்கிறது. நம்மறிவுக்குத் தெரியும்.

(7) நம்மை, நாம், விடாது, நீங்காது, பிறியாது, மறவாது, உணர்ந்து கொண்டே இருந்தால், ஏக, ஞானம், பிரகாசித்துக் கொண்டே இருக்கும். நம்மை, விட்டு, நாம், பிறியும் வரை, சுத்த பிரம ஞானம், பிரகாசிக்கும். நாமாய், இருப்பது நாம், சுத்தப் பிரமம். நாம், சுத்தப் பிரமம். என் மனது, பிறிவு அற்ற, சுத்த. ஞானம், சுக்தப் பிரமத்துக்கு, சுத்த ஞானப் பிரகாசம். நாம் ஏகம், அகண்ட பரஞானம். நாம், ஒருவன் தான், அன்னியமில்லாத அகண்ட பரஞானம், நமக்கு, யாவையும், நாமாய் பிரகாசிக்கிறது. நம் சுத்த ஞானம், நாம், சுத்தப் பிரமம், நம்மறிவு, இருபத்தெட்டு தத்துவங்களேயும், விழுங்கி, அதாய், பிரகாசிக்கிறது. நமது, ஞானம் நம்மை, நீங்காது, அறிந்து, பார்த்தால், நம்மை, பூரண சொருப மாய், பிரகாசிக்க, நாம், அறியலாம்.

(8) நாமாய், பிரகாசிப்பது, சுத்தப்பிரமம், நாம், சுத்தப் பிரமம், என்பது, பிரமம். அல்லவா, நாம், சுத்த பிரமமென்றறிய வேண்டும். பிரமம், நாம், சுத்தப் பிரமமென்று, அறிந்து, மறவா திருந்தால், சுத்த பிரமானந்தம், பிரகாசிக்கும். அது நாம், சுத்தப் பிரமம். நாம், ஏகமாய், பிறிவற்ற, சுத்த பூரண ஞான சொரூப

முடைய நாம், நாமாய், பிரகாசிப்பது, நாம், சுத்தப்பிரமம். நாம் போதகனபரப் பிரமம், நாம், பூரணமாய் அறிவுடையோன், நாம், அனியமிலா, பரப்பிரமம், நாம், சலனமிலா, பரப்பிரமம். நாம், அகண்டபர அறிவுடையோன். நாம், சலனமிலா, பரப்பிரமம், நாம், சர்வமென, உணர் உடையோன், நாம், பேதமிலா, பரப்பிமம். நாம், என்றும், பிறிவற்ற, அறிவுடையோன். நாம், ஏக பரிபூரணமாம், பரப் பிரமம், நாம் இருமையிலாதிருந்திடுவோம்.

(9) நாம். அகண்ட ஞானம், நாம், எங்கும், ஒன்ருய், நாம், பிரகாசிக்கிறது. அகம், அகத்தின் கண், ஒன்ருய், நாம், அறியும் ஞானம், நாம், ஒன்ருய், நாம் உதயமாகி நாம், பிரகாசிக்கிேரும், நாம் உதயமாஞல், யாவும், நாமாய், பிரகாகிக்கும். நாம், இருந்து. செய்வது, மெய் ஞானம், நாம், மறந்து, செய்வது, அஞ்ஞானம். நாம் இருந்தால், யாவும், நாம், நாம், மறந்தால், யாவும், பேதம், நம்மை, நாம், மறவாது. அறிவது நாம், அகண்ட ஞானுனந்தம். நாம், சுத்தப் பிரமம். நாம், சுத்த பரமகுரு கிருபையால், நாம், கிருஷ்ண பரமாத்மா கிருபையுடன் நாம், யாவுமாய் எங்கும், நம்மை, நிறைந்திருக்க நாம். அறிவது, பூரண, சுத்தப் பிரமமாய். அது, நாம், நம்மை, ஒருமைப் பொருளாய் பிரகாசிக்கிேரும்.

(1) நாம், சுத்தப்பிரமம், நம், சுத்த, ஞானத்திற்கு, உதய மாகிய, நம்மறிவுக்கு, பூரண, சமதிருஷ்டியாய், சுத்த சொரூபமாய், நாம், பிரகாசிக்கிேரும். பிரமத்திலிருந்து, உதயமாகிய, நாம், பிரம மென அறிந்து, மறவாது, பிறியாதிருப்பது, நாம் சுத்தப்பிரமம். எனது ஞானம், பேதம், அறியாது. சுத்தமாய், பிரகாசிக்கிறது. நாம், பேதம், இல்லாது, பிரகாசிக்கிறது. நாம், சுத்தப்பிரமம் நம்மை நமக்கு, ஏகமாய் தோன்றுவது. நாம், சுத்தப் பிரமம். இவ்வளவும், நாமாய் தோன்றுவது, நாம் சுத்தப்பிரமம், யாவும், நாமாய்பிரகாசிக்க தெரிந்தால் நாம், சுத்தப்பிரமம்.

(2) நாம் ஏகமாய், உதயமாகி, பிரகாசிப்பது. நாம், சுத்தப் பிரமம், நாம், ஏகத்துக்குத்தான், சுத்த ஏக சொருபமாய், பிரகாசிக்க, அறியும். நாம், ஏகமாய், அறிவது, ஞானம் நாம், சுத்தமாய், பிர காசிப்பது, பிரமம். நாம், நம்மை, மறவாதிருப்பது நாம், சுத்தப் பிரமம். யாவு, நாம்மாய் பிரகாசிக்கும் வேறு பேதம் இராது.

நம் சுத்த ஞானப் பிரகாசம், யாவும், நாமும், சுத்தப் பிரமமும, ஏகம். நாம், பிரமமென, கண்டு, அறிந்து, பிரகாசிக்கிறோம். யாவும் பிரிவு, பெறு மனம். நம், பிரகாசம், நாம், சுத்தப் பிரமம். நம், ஞானம், பேதம், அற்று, பிரகாசிக்கிறது. யாவும், பூரணமாய், பிரகாசிக்கிற, நம், அறிவுக்கு, அன்னியமில்லை. அவ்வறிவு, நம்மில், ஏகம். அயலில்லை. நாம், சுத்தப் பிரமம். யாவும், நாமாய், அறிவது ஞானம். நாம், சுத்தப் பிரமமென, அறியும், நம், ஞானம்.

(3) எனக்கு அன்னியமில்லை. யாவும், நாம், ஏகமாய், பிரகாசிக்கிறோம் : என்னிடத்தில், உதயமாகிய, சுத்த ஞானம், நாமாய், சுத்த சொரூபமாய், நாம், பிரகாசிக்கிறோம் : எனக்கு, பேதம் யாவும், தோனுதிருப்பது, நாம், எங்கும், நாமாய், பிரகாசிக்கிறோம் : நாம், சுத்தப் பிரமம். நாமும், சுத்தப் பிரமமும், ஏகமாய், பிரகாசிக்க, உணர்ந்துகொண்டு, அதை, நீங்காது, மறவாதறிவது, நாம், சுத்தப் பிரமானு சந்தானம் : ஞானிகள், அறிவானது, பேதமற்ற, ஆத்ம ஞானத்தையே, மறவார்கள். பிறிவில்லாத, அறிவில், ஒற்றுமை உடையவர்கள். சமத்துவத்தை உடைய சத்துக்கள், நெருங்கிய, விவகாரவேற்றுமையை, நீக்கினவர்கள். பிரமபதத்தை, அடைந்தவர்கள்.

(4) ஜிவதிசையில், யாவும், நாமாய், தெரிவது. ஞான அறிவுக்கு, ஆத்ம திசையில், யாவும், ஏகமாய், பிரகாசிக்கும். பிரம ஞானத்திற்கு : நாம், எது, நமதாக்கை மனதல்ல. நாம், பேதமில்லாது, நாம், ஒருவனுய், நாம், பிரகாசிக்கிறோம். நாம், எனக்கு, எனதாய், சுத்த, சாந்த, சத்துவ சொரூபமாய், நாம், பிரகாசிக்கிறது. நாம், சுத்தப் பிரமப் பிரகாசம். நாமாய்ப் பிரகாசிக்கிறோம். நாம், நமக்கு, வேறு, பேத பிரிவுபடாது, நாம், பிரகாசிக்கிறது. ஆத்மாவுக்கு, அறிவு, பிரகாசிக்கிறது. நமது, ஞானம், பிரிவு, பெருது, பிரகாசிக்கும், போது, நாம், சுத்தப் பிரமம். அதனுல், அவ்விதமாகப் பிரகாசிக்கிறது : வேறு, தெரியாது, பிரகாசிக்கிறது. நாம், நமது, ஞானம் : நாமாய், உணர்ந்தால், மெய்ஞானம, நாம், மறந்தால், அஞ்ஞானம் : மனத்தோற்றம், நமக்கு, பேதம், அற்ற, சுத்தஞானம், அறிவு. பூரணமாய், பிரகாசிக்கிறது. நாம் : நாம, இருந்தால், யாவும், நாம். நாம், மறந்தால், யாவும், பேதம்.

(5) நாம், எது, நமதாக்கைமனதல்ல. நாம், பேதம், இல்லாது, நாம், ஒருவனுய், நாம், பிரகாசிக்கிறேம். நாம் : எனக்கு, எனதாய், சுத்த, சாந்த, சத்துவ, சொரூபமாய், நாம், பிரகாசிக்கிறது. நாம், சுத்தப் பிரமப் பிரகாசம். நாமாய், பிரகாசிக்கிறேம். நாம் : நமக்கு, வேறு, பேத, பிரிவுபடாது, நாம், பிரகாசிக்கிறது. ஆத்மாவுக்கு, அறிவு, பிரகாசிக்கிறது : நமது, ஞானம், பிரிவு, பெருது, பிரகாசிக்கும்போது, நாம், சுத்தப் பிரமம். அதனுல், அவ்விதமாகப் பிரகாசிக்கிறது : வேறு தெரியாது, பிரகாசிக்கிறது. நாம், நமது, ஞானம், நாமாய், உணர்ந்தால், மெய்ஞானம், நாம், மறந்தால், அஞ்ஞானம். மனத்தோற்றம், நமக்கு, பேதம், அற்ற, சுத்தஞானம், அறிவு. பூரணமாய், பிரகாசிக்கிறது. நாம், நாம், இருந்தால், யாவும், நாம். நாம், மறந்தால், யாவும், பேதம்.

(6) எனக்கு, அன்னியமாய், தோனுவது, மாயை. எனக்கு, அபேதமாய்தோன்றுவது, சுத்தப் பிரமம் : நாம், எது, நாம், எவ்விதமானது, சர்வசாட்சியாகிய, ஏகத்துக்கு நாம், சாட்சியாய்' நாம், பிரகாசிக்கிறது. நாம், சுத்தப் பிரமமாயிருப்பதால், பேதமாய் நினைக்கத் தெரிபவன், மாயாப் பிரதிபிம்ப சுபாவன் : ஏகமாய், இருப்பது, நாம், சுத்தப் பிரமசொரூபம் : நாம், எங்கும், நாமாய்த் தெரிவது. நமது ஞானம் : நாம், பிரமம், எது. நாம், சுத்த பிரமம், எது : நாம், ஏகம். பிரமமென. யாவும். பிரிவு பெருத. நம்மை. நாம், மறவாதிருந்தால், மாயை, மனம், பிரியாது, இறக்கும், நாம், ஏகமாய், பிரகாசிக்கும் : பேதம், தெரியாதிருப்பது, நாம் : பேதம், தெரியாதிருப்பதை, உணர்ந்தது, நாம். சுத்தப் பிரமஞானம் : நாம், பேதம், அற்ற, ஞானம். நாம், பிரிவு, அற்ற, பிரமத்தை, நம், அதாய், நீங்காதிருப்பது, எதனுல், நாம், சுத்தப் பிரமமாயிருப்பதால் : நாம், அயலற்ற ஞானம்.

(7) நாம், அகண்டாகார, சொரூபம், நம, அதாய், இருப்பது, எதனுல், நாம், சுத்தப் பிரமமாயிருப்பதால் : பேதம், அற்ற, நாம், பிரிவு, அற்ற, ஏகம். நாம், சுத்தப்பிரமம். நாம், பேதம், அற்ற, நாம், ஏகமாய், இருப்பது. எதனுல், நாம், சுத்தப்பிரமமாயிருப்பதால் : என் மனதிற்கு, ஏகமாவே இல்லை. எனக்குப் பேதமாகவே இல்லாதிருப்பது, எதனுல், நாம், சுத்தப் பிரமமாயிருப்பதால்:

நாம், யாவும், பிரிவு, பெருதவன். நாம், யாவும், பிரிவு, பெரு திருப்பது, எதனுல், நாம், சுத்தப்பிரமமாயிருப்பதால் : நமக்கு, நாமாய்ப் பிரகாசிக்கிறேம். என்னை, எனக்கு, சுத்த சொரூபமாய், தெரிவது. எதனுல் : நாம், சுத்தப் பிரமமாயிருப்பதால் : எனது, சுத்த ஞான, அறிவுக்குள்ளே, நாம், இருந்து, யாவும், பூரண சொரூபமாய், நாம், பிரிவுபடாது, பிரகாசிக்கிறேம்.

(8) ஏகமாய், அது, நாமாய், பிரகாசிக்கிறேம் : நாம், சுத்தப் பிரமம். நம், சுத்த ஞானத்திற்கு, யாவும், பிரிவு பெருது, சுத்த, ஏக, ஞான சொரூபம், உதயமாகியது. நாம், நாமாய், நாம், பிரகா சிக்கிறேம் : உருவம், இல்லாததை, உணர்வது, சுத்த மனம். சுத்த மனதிற்கு, சுத்த ஞானம், பிரகாசிக்கும். நாம், சுத்தப்பிரமம். நம்மிடத்தில், உண்டானது, சுத்த, ஏகமாய், அது, நாமாய், பிரியாது, மறவாதுணர்வது, நாம், சுத்தப் பிரமம். சுத்தப்பரமகுரு, சதா, சுத்த கிருபை, அருளவேணும். சுத்த, உபாசனு முகூர்த்த. கிருஷ்ணபரமாத்மா, இருமையற்ற, ஏக, கிருபை, அருளவேணும் : சுத்த, நாம், ஆத்மஞான சுபாவ கிருபை, அருளவேணும். சுத்த, நாம், பரப்பிரமம், சுத்தசத்சுபாவ, கிருபை, அருளவேணும் : ஓம். தத். ஸத்.

(9) சுத்தப் பரமகுரு சத்து : சுத்த நாம் சித்து : சத்தை, சித்து, மறவாது. பிரியாதிருப்பது, நாம், சத்து : சித்து சத்தை ஏக மாய் உணர்வதால் : நாம் சித்து. சுத்த சத்து : அதனுல், நாம், சுத்தப் பிரமம் : நாம் சத்து. பூரண சொரூபம் : நாம், சத்தாயிருப் பதால், சுத்தப் பிரமமாய், பிரகாசிக்கிறேம் : பிரிவுபெறு மனதிற்கு யாவும், சுத்தப் பிரமம் : நாம், சத்து சொரூபமாய் : சுத்தம் பிரி யாது, பிரகாசிக்கிறேம் : நாமாய், பிரகாசிக்கிறது. சுத்த சத்து. சுத்த பிரமத்திற்கு, சுத்த ஞானமாய், நாம், சுத்தமாய், வேரறவே, மிகவும், உபசாந்தனுய், பிரகாசிக்கிறேம் : நாம், நமக்கு : யாவும், நாமாய்த் தெரிவது. நாம், சுத்தப் பிரமம் : நாம், என்பது, கடவுள் எங்கும், யாவும், நாமும், ஏகமாய், நாம், பிரகாசிக்கிறேம். நாம், எது, நாம், எவ்விடத்தும், வேறில்லாது, யாவும், நாமாய், பிரகா சிக்கிறேம். நரமென்றெண்ணுவது எது. பிரமம், நாம், சுத்தப் பிரமமென்றெண்ணுவதாகும்.

(1) நாம், எங்கும், நாம், சுத்தமாய், பிரகாசிக்கிறோம்: மாயா உருவமான, உலக எண்ணமும், இல்லாதிருக்கும்போது, அதிலிருந்து, இதுபரியந்தம், இருப்பது, ஏதோ, அது. நாம், நிறை வடிவம். அது நாம். சுத்தப் பிரமம்: நாம், சுத்தப் பிரமம். சத்து சொரூபம். நாமாய், நாம், ஒன்றான, பூரண, பிரகாசமாய், உதய மாகி, நாம், பிரகாசிக்கிறோம்: இது பேதமனம். நினைவுக்கு, அது, சுத்த நிறைவு, எனதறிவுக்கு, நாம், சுத்த, சத்து. நிறை வடிவம். நம், உருவம்: மாயா மனம், இந்திரியம், உலகம், நமக்கில்லை: நமக்கு, பேதமனதில்லை. எல்லாம், நாமாய், பிரகாசிக்கிறோம். நாம், சுத்த சத்து, நம்மிடத்தில், உதயமாகிய, நாம், பிரியாதிருக்க, அறிவால் உணர, நாம், சுத்தப் பிரமம்: நம்மிலிருந்து. சுத்த, ஏக, ஞானம், உதயமாகி, அதாய், பிரகாசிக்கிறது. எதனால்: நாம், சுத்தப் பிரமமாயிருப்பதால்: நாம், சுத்த, ஏகமாய், பிரகா சிக்கிறோம்.

(2) நமது, பிரம, சத்து, சொரூபத்திலிருந்து, உதயமாகிய, சுத்த, சத்து, நாம்: நாமும், ஜகமும், ஏகம், பிரமமாய், பிரகாசிக்கத் தெரிந்து, நாம், பிரகாசிக்கிறோம்: நாம். அதுவும், அறியாதிருப்பது. நாம், சுத்தப்பிரமம். வேறு, தெரியாத, சுத்த ஞான அறிவு நாம், நாம், சுத்தம், மறவாது பிரமமாய் நீங்காது, பிரகாசிக்கிறோம். நாம், நாம் சுத்தப்பிரமத்திற்கலந்து, பிறியாது. ஏகமாய், நாம், சுத்த பூரண சொரூபமாய், பிரகாசிக்கிறோம். நாம் எங்கும், நிறைந்தவன் நாம் சுத்த, சத்து, நிறைவடிவம், நம்முருவம், மாயா, மனம். இந்திரியம், உலகம், நமக்கில்லை: நமக்கு பேதமனதில்லை, எல்லாம் நாமாய்ப் பிரகாசிக்கிறோம். நாம், சுத்த, சத்து, நம்மிடத் தில், உதயமாகிய நாம், பிறியாதிருக்க, அறிவாய் உணர, நாம் சுத்தப்பிரமம்.

(3) நம்மிலிருந்து, சுத்த, ஏக ஞானம் உதயமாகி, அதாய், பிரகாசிக்கிறது. எதனால், நாம், சுத்தப் பிரமமாயிருப்பதால், நாம், சுத்த, ஏகமாய் பிரகாசிக்கிறோம். நமது பிரம, சத்து, சொரூபத்தி லிருந்து உதயமாகிய, சுத்த, சத்து, நாம், நாமும், ஜகமும் ஏகம், பிரமமாய் பிரகாசிக்கத் தெரிந்து, நாம் பிரகாசிக்கிறோம். நாம், அதுவும், அறியாதிருப்பது, நாம் சுத்தப்பிரமம். வேறு தெரியாத,

சுத்த ஞான, அறிவு, நாம் : நாம், சுத்தம், மறவாது, பிரமமாய், நீங்காது, பிரகாசிக்கிறோம் : நாம், சுத்தப் பிரமத்திற்கலந்து, பிரியாது, ஏகமாய், நாம், சுத்த, பூரண, சொரூபமாய், பிரகாசிக்கிறோம். நமக்கு, அன்னியமான, பேதம், அற்று, தோற்றம், தெரியாது : வேறாய் பிரியாது : யாவும், தோணுது : நம்மை, சதா, மறவாது, சுத்தமாய் பிரகாசிக்கிறது : நாம், சுத்தப்பிரமம் : நாமாய், இருப்பது, நாம், சுத்தப்பிரமம் : யாவும், நாமாய், தெரிவது, பிரமத்துக்கு : நாமாய், சுத்தமாய், பிரகாசிக்கிறது : நாம், சுத்தப்பிரமம்.

(4) நாம், பிரமமாயிருப்பதால், ஞானம், நாமாய், பிரகாசிக்கிறோம். நம்மைப் பார்த்தால், நாம், சுத்தப்பிரமமாய்த் தெரிகிறது. நம்மை, மறந்தால், பேத மனமும், உலகமும், சகலமும், தோன்றுகிறது. நம்மை, நாம், சுத்த ஞானம், பிரியாது, பிரகாசிக்கிறது : நம்மை, நிறைந்திருக்க, அறிந்திருப்பதால், சுத்தப்பிரமம், சதா, பிரகாசிக்கிறோம். நமக்கயலாய், தெரிபவன், நாமல்ல, யாவும், நாமாய், பிரகாசிப்பதை: அறிந்ததெதோ, அதுவும், இல்லாதிருப்பது : நாம், சுத்தப்பிரம, சத்து, சொரூபம்.

---

ஓம். தத். ஸத்.
பிரம்மணே நம :

(1) பரம குருஸ்வாமி, பாதக்மலங்களுக்கு, பிர்ம்ம தீர்த்த, அர்க்கியபாத்ய, சுத்தஸ்தான, அபிஷேசு முதலான, அயலற்ற, ஆராதனே, நைவேத்ய, பேதமற்ற, துளசிபத்ர, புஷ்பாணி, பிரிவற்ற, பாதங்களுக்கு, சமர்ப்பயாமி.

ஓம். தத். ஸத்.

## தற்பத லட்சியார்த்த ஞானனுபவ பிரகாசம்.

---

(2) நாம், சுத்தமாய், பிரகாசிக்கிறது : நம, சுத்த, அறிவுக்கு, தெரிய, அறிகிறது : நம, சுத்த, சொரூபத்தை, நம, சுத்த, அறிவு, மறவாது, பிரியாதிருந்தால் : நாம், சுத்தப்பிரமம் : வேறொன்றும்: தெரியாதிருக்கும் போதிருப்பது : நாம், சுத்த, பிரமப் பிரகாசம்,

சுத்தம், பூரணம், ஏகம், நம்முருவம் : நாம், சுத்தப்பிரமம். ஏகமாய், பிரகாசிக்கிறோம் : நம, சுத்த, ஞானத்திற்கு, வேறொன்றும் தெரியாது. பிரகாசிக்கிறோம். யாவும், நாமாய், பிரகாசிக்கிறது. நமது சொரூபம்.

(3) நாம், ஏக, சொரூபமாக, பிரகாசிக்கிறது. நாம், சுத்தப் பிரமம் : நமக்கு, அன்னியமில்லை. யாவும், நாமாய், பிரகாசிக்கிறோம் : நமக்கு, யாவும், ஏகமாய், பிரகாசிக்கிறது. நாம், சுத்தபிரம, சத்து, சொரூபம் : நாம், சுத்த, பிரமம். இப்ப, எது, பிரகாசிக்கிறதோ, அது, நாம். நிறைவடிவம். அது, நம்முருவம். நாம், சுத்த, பிரம சத்து சொரூபம் : நாம், — நம்மளை, நம. சுத்தமாய், பிரகாசிக்க உணர்ந்தால் ; நாம், சுத்தப்பிரமம். நம, சுத்த ஞானத்திற்கு : யாவும், சுத்த. சொரூபமாய் : நாம், சுத்த, ஏகமாய், நாம், சுத்த, பூரண, பிரகாசமாய், பிரகாசிக்கிறது.

(4) நாம், சுத்த, பிரம, சத்து, சொரூபமாய், நாமும், ஜகமும், சுத்த, பிரமமும், ஏகமாய், உணர, நாம், உதயமானதால், சுத்தமாய், பிரகாசிக்கிறோம் : நாமும், ஜகமும், பேத, மனோவிகற்பத்துக்காதாரமாகிய, சத்திகளும், சுத்தப்பிரமமென, அறிந்துணர, தெரிந்தால் : நாம், சுத்தப்பிரமசத்து, சொரூபம் : நாம், சுத்த, பிரமமாய், பிரகாசிக்கிறோம் : நாம், எது நாம், சுக்த, ஏகமாய், தெரிகிறது, நாம் : நாம், சுத்த, ஏகமாய், உணர, எதற்கு, தெரிகிறதோ, அது, நாம். சுத்தப்பிரமம் : எல்லாம், நாமாய்த், தெரியும்போது, நாம், சுத்தப் பிரமமாய், தெரிகிறது. நாம், சுத்த, ஏகமாய், எங்கும், பூரணமாய். நிறைந்திருப்பதை : அறிவு, அறிகிறது. அனுபவ, ஞானப்பிரகாசம்.

(5) நாம், சுத்தப்பிரம, சத்து, சுபாவம் : சுத்தமென, சுத்தமாய், உணர்வது, நம, சுத்த, பிரம, ஞான சுபாவம் : நாம், பார்க்க, நாமும், யாவும். சுத்த, பிரமமாய், பிரிவற்று, பிரகாசிக்கிறோம். நாம், சுத்த, பிரமம். நமது, சுத்த ஞானம் : எங்கும், சுத்தமாய், பிரகாசிக்கிறது. நம, சுத்த, சொரூபம், சுத்தபிரமத்தை, பிரியாது. மறவாதுணர்வது : நாம், சுத்தபிரம, சத்து, சொரூப, பிரகாசம், நம்மிலிருந்து, நாம், உதயமாகி, யாவும், நாமாய், பிரகாசிக்கிறது : நாம், சுத்தபிரம, சத்து, சொரூப, பிரகாசம் : நாம், வேறு, தெரியாது,

சுத்தமாய், பிரகாசிப்பதை, நம், ஞான, அறிவு, அறிகிறது. நாம், சுத்தம், சுத்தம், சத்தை, பிரியாதுணர்ந்தால்: நாம், சுத்த, பிரம, சத்து, சொரூப, பிரகாசம்.

(6) நம்மிலிருந்து, யாவும், பிரிவு, பெறுதிருப்பது: நாம், சுத்தபபிரமம்: நம்மிலிருந்து, ஏகமாய், நிறைவு. பெறுது, பிரிவது, மூலப்பிரகிருதி. நாம், உதயம்: நம, சுத்தம், பிரமத்திலிருந்து: அகனல், நாம், சுத்தப்பிரமம்: நாமாய், பிரகாசிக்கிறது. நம, சுத்த பிரமத்திலிருந்து, உதயம். நம்மிடத்திலிருந்துதபமான, நாம், நாமாவே, பிரகாசிக்கிறது: நம. சத்து. நாமாய். தெரிவது நம. சுத்த. பிரமத்துக்கு: அன்னியம். வேறு. அறியாது. நாமாய் தெரிவது நாம. சுத்த. பிரமம் என. அதுவும். இல்லாது. பிரகாசிப்பது. நாம். சுத்தப்பிரமம். சத்து. சொரூப. பிரகாசம். அன்னிய பேதம். இல்லாத. நம்மை. சுத்த. பிரமமாய். தெரிவது, நாம்: நாம், சுத்த பிரமம்: நாம், சுத்தமாய், பிரகாசிக்கிறது. நாம். நாம், பிரமமாய், இருப்பதால், சுத்த, ஏகமாய், பிரகாசிக்கிறோம்.

(7) நாம், நிறைந்திருக்க, சுத்த. ஏகமாய். உணர்வது. நம, சுத்த, பிரமத்துக்கு, சுத்த. புத்தி, சுத்த. ஞானத்தில். கலந்திருக்க, மறவாதுணர்வது, நாம். சுத்த, பிரமம்: நமக்கயலாய், தெரிபவன். மாயா, பிரகிருதி. நாமாய், தெரிபவன், பிரமம்: தோற்றம், தெரியாதது: உதயமாகி, யாவும். நாமாய், பிரகாசிக்கிறது: தோற்றம், தெரிபவன், மாயா, பிரதிபிம்பன்: நாமாய். இருப்பதே, சுத்தப்பிரமம்: நாம், பிரமமாய், இருப்பதால், யாவும், நாமாய், பிரகாசிக்கிறோம்: நம, சுத்த, பிரமமானது: நாம், சுத்தப்பிரம மென்று, உணர, நாம், சுத்த, பிரமமாய், பிரகாசிக்கிறோம்.

(8) நம, சுத்த, சொருபம், உதயமாகி, நாமாய், பிரகாசிக்க, உணர்வது. நாம்: நாம், சுத்த, பிரமம்: நாமாய், பிரகாசிக்கிறோம்: வேறாய், தெரிபவன், நாமல்ல. அன்னிய பேதம், தெரியாதிருப்பது, நாம்: யாவும், நாமாய், பிரகாசிக்கிறது. பிரமப்பிரகாசம், நமக் கன்னியம். தோணுதிருப்பது. நாம், சுத்த பிரமம்: நாம், நாமாவே, நாம். பிரகாசிப்பது, நாம். சுத்தப்பிரமம் எல்லாம், நாமாவே, பிரகாசிப்பது. எதனல்: நாம், சுத்த, பிரமமாய், இருப்பதால்: நாம், பிரமமாயிருப்பதால், யாவும், நாமாய், பிரகாசிக்கிறோம்: நாம், சுத்த

மாய், நிறைந்து, எங்கும், பிரிவற்றிருக்க: மாயா, கற்பிதன், பேதமாய், நினைவது. எதற்காக: அதுகளெல்லாய், இல்லாதது. நாம், சுத்த பிரமம்.

(9) நாம், சுத்த: பரமாத்மாவாய்: நம, சுத்த, ஞானம்: அறிவு, சொரூப, பிரகாசமாய்: நாம், சதா, பிரகாசிக்கிறோம்: விருத்தி ஞானமும், பிரபஞ்சமும், இல்லாது, சுத்தம், உதயமாகி, சதா, பிரகாசக்கிறதை, அறிந்ததெதோ, அதுவும், இல்லாதிருப்பது; நாம், சுத்தப்பிரமம்: நம்மிலிருக்கும், பிரமம் அல்லவா: நாம், சுத்தப் பிரமமென, அறிந்துணர்கிறது: அதனால், நாம், சுத்த, பிரமசத்து, எல்லாப் பிரமமும், நாமாய், தெரிவது, நாம். சுத்தப்பிரமம்: நம் பரமாத்மாவுக்கு, யாவும், சதா, சுத்த, பிரமமாய், பிரகாசிக்கிறது: நாமாய், தெரிவது, நம, பிரமத்துக்கு: நம, ஆத்மாவே, நாம், சுத்தப் பிரமம்.

(1) நாம், என, நனவில், அறிந்தால், யாவும், சுத்த, ஏகமாய் பிரகாசிக்கிறது: நாம், சுத்த, பிரமமென உணறுகிற, துய்யஞானம், சுத்த, ஏக, ஆனந்தம். நாம், சுத்தபிரமம்: நாம், சுத்தபிரமம்: நாமாவே, நாம், பிரகாசிக்கிறது. நாம். எங்கும், நிறைந்து, நாம், சுத்த, பிரமமாய், பிரகாசிக்கிறோம். நாம், சுத்த, பிரமத்திற்கலந்து, நாம், பிரிவற்றிருப்பது. நாம், மறவாதிருந்தால், நாம், சுத்தப்பிரகாசம்: நாம், சுத்தப்பிரமம். நாமாவே, நாம், சுத்தமாய், நிறைந்து, பிரகாசிக்கும்போது, பேதமற்று, நாமாவே, உணர்வது. நாம், சுத்த, பிரமானந்தம். நாம், எங்கும், பிரிவுபெறுது, நாமாய், நிறைந்து, பிரகாசிப்பது, நாம், சுத்தப்பிரமம்.

(2) நாமே, எல்லாம், நிறைந்து, சுத்த, பிரமமாய், பிரகாசிக்கிறோம்: நாம், ஒன்றாய், தெரியும்போது: எல்லாம், சுத்த, பிரமமாய். பிரகாசிக்கிறது: நாம், சுத்த, பிரமத்திற் கலந்திருப்பதை, நம, நிறைவு, மறவாதிருந்தால், நாம், சுத்தப்பிரமம்: தன்னே, உள்ளுணர்வால், உணர, நாடுதலினால்: நாமாவே, எல்லாம், பிரகாசிக்கிறோம்: அதனால், நாம், சுத்த, பிரம, ஞான, சத்து, சொரூபம், நாம். சுத்தமாய், நிறைந்து, பிரகாசிப்பது, நாம்: நாமாவே, நிறைந்து, பிரகாசிப்பது. நாம், சுத்தப்பிரமம்: பிரமமாவே, நிறைந்து, பிரகாசிப்பது. நாம், சுத்தப்பிரமம்.

(3) நாம், சுத்தப்பிரமம். சத்து, சொரூபம்: நம, சுத்த, அறிவு, விகற்ப, ரூபமானுல், நாம், சுத்த, பிரமத்தை, கைவிட்டு, வேருகும்: நாம், மறவாது. ஏகமாய், பிரகாசித்தால், நாம், நாம் தான். சுத்தப்பிரமம்: நாம். சுத்த, பிரமம்: நாம், சுத்த, பிரமம், எங்கும், நாமாவே, பிரகாசிக்கிருேம்: நம, சுத்த, அறிவுக்கு, யாவும், நாமாய், பிரகாசிக்கிறது. நாம், சுத்த, ஆத்மா: சம, பாவனையாய், பிரகாசிப்பது. சுத்தஞானம், நாம், சுத்தமாய், பிரியாது, பிரகாசித்திருப்பது: நாம், சுத்த, ஆத்மா: அதுவே, நாம். சுத்தப்பிரமம், பிரிவுபெறும், மனம், பேதமானுல், யாவும், பேதம்: நாம், சுத்தப்பிரமம், நம, ஞானம், சுத்தமாய், பிரகாசிக்கிறது. நாம், ஆத்மா, நாம், எங்கும், ஏகமாய், நிறைந்து, எல்லாம், நாமாவே, பிரகாசிப்பது, நாம், சுத்தப்பிரமம்.

(4) நாம், சுத்த, ஆத்மா, நம, சுத்த, ஞானம், நம்மை, பூரண, சொரூபமாய், உணருகிறது. அதனுல், நாம், சுத்த, ப்ரமம்: நாம், ஆத்மா, ஏகம், பிரமம், நாம், எங்கும், நிறைந்து, பிரகாசிப்பது, நாம், சுத்த, பிரம, பிரகாசம்.

ஓம். தத். ஸத்.

பிரமனே நம: பரமகுருஸ்வாமி, கிருபையும். உபாசனு முகூர்த்த பரமாத்மா. கிருபையும். வேணும். வேணும்.

ஓம். தத். ஸத்.

**பரமகுரு வாக்கியம்.**

(1) தன்னை அறியும், வழியில், மனதைத் திருப்பிவிட்டால், நாம் மாற்றினுலும், மாருது.

(2) சங்கற்ப, விகற்பங்கள், ஒடுங்கி, அடங்கி, மனேவிருத்தி தேய்ந்து, பஞ்சகோசங்களையும், தாண்டிய விடத்திலுள்ள, ஆனந்த அனுபவத்திலேயே, தங்கி இருக்குமென்று, எண்ணுகிறேன்.

(3) பிரமானுபவத்தைச் சீக்கிரமடைந்து, பிரப்பிறப்பை யொழித்து, எப்போதும், ஆனந்தமடைய வேண்டிய முயற்சியே செய்து வாருங்கள்.

(4) வெளியில் எத்தனை விவகாரங்களிருந்தபோதிலும் மனம் மாத்திரம் தனித்து பிரமசுபாவத்தில் நிலைபெற்றிருப்பது ஜீவன் முக்தர்கள், சுபாவமாகையால், அப்படி நீங்கள், நடந்துவாருங்கள்.

(5) நீங்கள் சுத்த அபரோக்ஷ ஞான சுவானுபூதியில் அழுந்தி, இருப்பீர்களென்றும் நினைக்கிறேன்.

(6) பிரமானுபவத்தில் மனம் கரைந்து தானே தானான நிலைமை உங்களுக்கு வாய்த்திருக்கிறதாகத் தெரிகிறது. அது நீங்கள் பல ஜென்மாந்திரத்தில் செய்து வந்த புண்ணிய பரிபாவ மாகும். அப்பியாச அனுபவங்களை விடாது செய்து வரவும்.

(1) சதா எத்தொழில் செய்தபோதிலும் ஆத்ம அனுபவத் திலேயே இருக்கவேண்டும்.

(2) ஆத்மா அனுபவம் விடாமற்செய்து அமிர்த ஞானம் கிடைத்திருக்குமென்றெண்ணுகிறேன்.

(3) உங்களுடைய சொந்த பிரமானுபவத்தில் நிலைபெற்ற சுபானுபூதியில் அழுந்தியிருப்பீர்களென நினைக்கிறேன்.

(4) உங்களுடைய பிரம அனுபவம், அநுஷ்டிப்பதன் சிரத் தையைக் காட்டுகிறது. அதிக கால பழக்கத்தினலும் உங்க ளுடைய முயற்சியினலும் சிரத்தையினலும், பலனுக்கு வந்திருக் கிறது. இன்னும் அக்கண்டபர வியாபக, விதேக முக்திநிலை வரை, தடையில்லாமற் செல்லும்.

(5) பஞ்சகோசங்களையும், தாண்டிய விடத்தில், மனதைச் செலுத்திக்கொண்டே யிருக்கவேண்டும்.

(6) தெய்வமென்பது, சர்வ வியாபியாகிய, பிரமத்திற்கு பொருந்துமேயன்றி, மற்ற உருவதெய்வங்களுக்குப் பொருந்தாது.

(1) நீங்கள் வியாபக சொரூப சைதன்யத்தின் அனுபவத் திலேயே, மாருது இரண்டற்றிருப்பீர்கள்.

(2) தானே, தானுயிருக்கிற, பிரமானுபவமே ஜென்ம மரணத்தைப் போக்குகிற பெரிய மருந்தாகும். அதை ஒவ்வொருவரும் அடைய வேண்டியது அவசியம்.

(3) சரீரமும் வாக்கும் இந்திரியங்களும் பிராணனும் மனமும் என்ன விவகாரம் செய்துகொண்டிருந்தாலும், தனது ஆத்மானுபவத்திலிருந்து உண்மை நழுவாதிருக்கிற நிலைமையே, சகச நிஷ்டை. அது ஜீவன் முக்தி. அதுதான் உங்களுடைய அநுபவம் அந்த நிலைமை.

ஓம். தத். ஸத்.

## (1) அநுபவ ஞானம்.

நாம், சுத்த, பிரமம், எதை, நாமென்றெண்ணுவது : பிரமம், நாமென்பது. எதை, நாம், எங்கும், நிறைந்த : நாம், சுத்தஞான மாய் : நாம், அகண்டபரஅறிவாய் : நாம், சுத்த, ஏகசொரூபமாய்: நாம், சுத்த பிரமமாய், பிரகாசிக்கிறோம்.

(1) எனக்கு, நாம், வேருனல், யாவும் பேதம். (2) எனக்கு, நாம், ஏகமானல், யாவும், நாமே. (3) எனக்கு, நாம், இருந்தால், யாவும், தூய, பிரகாசம். (4) எனக்கு, நாம், இருந்தால், யாவும், தூய, சத், சொரூபம். (5) நமக்கு, நாமாவே, எங்கும், நிறைந்து, பிரகாசிக்கிறது, அப்பியாசம். (6) நாம், சுத்த, பிரம, சத்து, சொரூபம்.

(1) நம்மிலிருந்து, பேத, பிரிவு, பெருது, உணர்வது, நாம். சுத்த, பிரமஞானம். (2) அகமுக, பார்வை, உணர்வது, நம், ஆத்ம, ஞானம். (3) நாம், பார்க்கனும் : அறியலாம் : நாம், எதிலிருந்து, வந்தோமென, உணர, பார்க்க, அதுவும், இல்லாதது, நாம்.

(1) நம, ஆத்ம, திசையில், யாவும், நாமாய்த் தோனுகிறது. (2) உலக ஜீவதிசையில், யாவும், பேதமாய், தோனுகிறது. (3) நாம், எது, நாம், யாவுமாய், நாம், சுத்தமாய், நாம், ஏகமாய், நாம், பிரிவற்றிருப்பது, நாம், சுத்த, பிரமம், நாம், சத்து, சொரூபம், நாம், அதாகவே, பிரகாசிக்கிறோம்.

(4) நாம், யாவும், பிரிவு, பெறுது, பிரகாசிப்பது நானே: நாம், பேதமில்லாத, சுத்த, பிரமம், நானே: நாம், இருந்தால், பேதமில்லை: யாவும், நானே: மூவவஸ்தையு, முணராத, சுத்த, சத்து, நானே: நாம், சுத்த, ஆத்மா, ஆத்மாவே, நாம். சுத்த, பிரமம்.

(5) நம்மை, மறவாது, இருப்பது, நாம்: நம்மை, நிறைவாய், அறிவது, நாம்: ஒன்றும் தோணுதிருப்பது, நாம்: அதுவும், இல்லாதிலிருப்பது, நாம்: நம்மில், பிரிவுபெறுது, பிரகாசிக்கிறது,நாம்.

(1) நாம், சுத்த, பிரமம், சத்து, சொரூபம்.
(2) நம்முருவம், சுத்த, ஏக, ஞான, பிரகாசம்.
(3) நாம், நாமாவே, யாவும், ஏகமாய், பிரகாசிக்கிறது.

(1) நாமாய், தெரிவது, பிரமம்.
(2) பிரமமாய், தெரிவது. நாம்.

இஃது

**திருச்சி ஜில்லா முசிரி தாலூகா சேருகுடி கிராமம்**
**க. மு. கருப்பையா பிள்ளை மனைவி**
**சின்னக்குட்டி அம்மாள் அவர்களால்**
**விநியோகிக்கப்பட்டது.**